# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## நிதி முகாமைத்துவம் (பொறுப்பு) (திருத்தம்)

***2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரால்*
*2013, மாச்சு மாதம் 08 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2013, பெப்புருவரி மாதம் 26 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***211 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : *ரூபா 3.00*** **தபாற் செலவு : *ரூபா 5.00***

2-PL 007109-650 (2013/03)

**சட்டப்பயன்பற்றிய கூற்று**

**வாசகம் 2:** இவ்வாசகம், 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (உ) என்னும் பந்தியைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, அரசாங்கத்தினால் அனுசரிக்கப்படவேண்டிய பொறுப்புள்ள நிதி முகாமைத்துவத்தின் மூலாதாரக் குறிக்கோள்களைத் திருத்துவதுமாகும் :

(அ) முற்போந்த இரு நிதியாண்டுகளுடன் சேர்த்து நடப்பு நிதியாண்டின் மொத்த உள்ளூர் உற்பத்தியின் நூற்றுவீதத்தை 4.5 சதவீதத்திலிருந்து 7 சதவீதத்துக்கு அதிகரிப்பதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) எண்பத்தைந்து வீதத்திலிருந்து எண்பது வீதமாக 2013 சனவரி 1 ஆம் திகதியில் தொடங்குகின்ற நிதியாண்டின் முடிவில் எய்தப்படவேண்டிய அரசாங்கத்தின் மொத்த பொறுப்புடைமை தொடர்பில் முன்வைக்கப்பட்ட நோக்கெல்லையை குறைப்பதன் மூலமும்.

## நிதி முகாமைத்துவம் (பொறுப்பு) (திருத்தம்)

*ச.வ.ஓ-14/2013*

### *2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

இலங்கைச் சனநாயகசோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்*

**1**. இச்சட்டம், 2013ஆம் ஆண்டின் .. ஆம் இலக்க, நிதி முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன் 2013, சனவரி 1 ஆந்தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

*2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2**. இரண்டாயிரத்து மூன்றாமாண்டின் 3 ஆம் இலக்க, நிதிமுகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 3 ஆம் பிரிவு பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது:-

(அ) அப்பிரிவின் (உ) என்னும் பந்தியில் “4.5 சதவீதத்தை” என்னும் எண்களுக்கும் சொல்லுக்கும் பதிலாக, “7 சதவீதத்தை” என்னும் எண்ணையும் சொல்லையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில் “2006 சனவரி 1 ஆம்” “எண்பத்தைந்து சதவீதத்தை” மற்றும் “2013 சனவரி 1 ஆம்” என்னும் எண்களுக்கும் சொல்லுக்கும் பதிலாக முறையே “2013 சனவரி 1 ஆம்” “எண்பது சதவீதத்தை” மற்றும் “2020 சனவரி 1 ஆம்” என்னும் எண்ணையும் சொல்லையும் இடுவதன்மூலமும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

2-PL 007109 -650 (2013/03)

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*